**மாவட்ட உரிமையியல் நீதிமன்றம், மேட்டுர்**
**முன்னிலை:திரு.எஸ்.பிரின்ஸ் சாமுவேல் ராஜ், பி.ஏ., எல்.எல்.எம்.,**
**மாவட்ட உரிமையியல் நீதிபதி, மேட்டுர்**
**2019 ஆம் ஆண்டு ஆகஸ்ட் மாதம் 22 ஆம் நாள் வியாழக்கிழமை**
**இ.ம.எண்.01/2019**
**அ.வ.எண்.09/2013**

கோவிந்தராஜ் ...மனுதாரர்/16 ம்பிரதிவாதி

/எதிராக/

மாரியம்மாள் ...எதிர்மனுதாரர்/வாதி

இம்மனு கடந்த 09.08.2019 ஆம் தேதியன்று இந்நீதிமன்றம் முன்பாக இறுதியான விசாரணைக்கு வரப்பட்டு மனுதாரர்/16 ம்பிரதிவாதி தரப்பில் வழக்கறிஞர் திரு.எ.ராமகிருஷ்ணன் அவர்கள் ஆஜராகியும், எதிர்மனுதாரர்/வாதி தரப்பில் வழக்கறிஞர் திரு.ஏ.எம்.சி.பெரியசாமி அவர்கள் ஆஜராகியும் இருதரப்பு வாதுரை கேட்கப்பட்டும் ஆகியவற்றை பரிசீலனை செய்தும் இதுநாள் வரை எமது ஆய்வில் இருந்து வந்து மேற்படி இம்மனுவில் இந்நீதிமன்றம் வழங்கிடும்.

உத்தரவு

இம்மனு உரிமையியல் நடைமுறைச்சட்டம் கட்டளை 9 விதி 7 மற்றும் பிரிவு 151 ன் கீழ் கடந்த 17.07.2019 ம் தேதியன்று மனுதாரர்/16 ம்பிரதிவாதிக்கு எதிராக பிறப்பிக்கப்பட்ட ஒருதலைப்பட்ச உத்தரவினை ரத்து செய்யக் கோரி மனுதாரர்/16 ம்பிரதிவாதி இம்மனுவினை தாக்கல் செய்துள்ளார்.

1) மனுப்பிரமாணப் பத்திரிக்கையின் சுருக்கம் : -

6 ம்பிரதிவாதி அங்கமுத்து என்பவர் காலமாகிவிட்டதால், அவரது வாரிசுகளை இவ்வழக்கில் தரப்பினர்களாக சேர்க்க வேண்டி மனு செய்து மேற்படி மனுவும் அனுமதிக்கப்பட்டு, மனுதாரருக்கு வழக்கறிஞர் மூலம் அறிவிப்பு அனுப்பப்பட்டு 17.07.2019 ம் தேதி நீதிமன்றத்தில் ஆஜராக வாய்தா போடப்பட்டிருந்தது. மனுதாரர் ஊரிலிருந்து பேருந்தில் வரும்போது பேருந்தில் பழுது ஏற்பட்டு நீதிமன்றத்திற்கு வருவதற்கு காலதாமதம் ஆகிவிட்டது. எனவே நீதிமன்றத்தில் மனுதாரரை அழைத்தும் ஆஜராகாததால் மனுதாரர்/16 ம்பிரதிவாதிக்கு எதிராக ஒருதலைப்பட்ச உத்தரவு பிறப்பிக்கப்பட்டுள்ளது. மேற்படி தவறு வேண்டுமென்றே ஏற்பட்டதல்ல. எனவே 17.07.2019 ம் தேதியில் மனுதாரர்/16 ம்பிரதிவாதிக்கு எதிராக பிறப்பிக்கப்பட்ட ஒருதலைப்பட்ச உத்தரவினை ரத்து செய்யக் கோரி மனுதாரர்/16 ம்பிரதிவாதி இம்மனுவினை தாக்கல் செய்துள்ளார்.

2) எதிர்மனுதாரால் தாக்கல் செய்யப்பட்ட எதிருரையின் சுருக்கம்:

மனுதாரரின் மனு பொய். சட்டப்படிக்கும், சங்கதிகளின் படிக்கும் நிலைக்கத்தக்கதல்ல. மனுதாரர்/16 ம்பிரதிவாதிக்கு நீதிமன்றத்தின் உத்தரவின் பேரில் எதிர்மனுதாரரால் Private Notice அனுப்பப்பட்டு கடந்த 02.07.2019 ம் தேதியில் பெற்றுக் கொண்டுள்ளார். மேலும் 2 வது முறையாக மனுதாரருக்கு Private Notice அனுப்பக் கோரி எதிர்மனுதாரருக்கு உத்தரவு பிறப்பித்ததின் பேரில் அறிவிப்பு அனுப்பப்பட்டு அதனையும் மனுதாரர் 17.07.2019 ம் தேதிக்கு பல நாட்களுக்கு முன்பே பெற்றுக்கொண்டு விட்டார். ஆகவே 17.07.2019 ம் தேதிக்கு முன்பே மனுதாரரது வழக்கறிஞரைப் பார்த்து மனுதாரருக்கு ஆதரவாக ஆஜராக கோரிட அவகாசம் இருந்தும் வேண்டுமென்றே பொய்யான சங்கதிகளை முன்னிறுத்தி வழக்கினை காலதாமதப்படுத்த மனுதாரர் மனுதாக்கல் செய்துள்ளார். எனவே மனுவினை செலவுத் தொகையுடன் தள்ளுபடி செய்ய வேண்டுமென எதிர்மனுதாரர்/வாதி கூறியுள்ளார்.

3) இருதரப்பு கற்றறிந்த வழக்குரைஞர்களின் மதிப்பிற்குரிய வாதங்கள் கேட்கப்பட்டன. ஆவணங்கள் பரிசீலனை செய்யப்பட்டன. மனுதாரர் மற்றும் எதிர்மனுதாரர் தரப்பில் வாய்மொழிச் சாட்சியங்கள் முன்னிலைப்படுத்தவில்லை. மனுதாரர் தரப்பில் சான்றாவணங்கள் முன்னிலைப்படுத்தவில்லை. எதிர்மனுதாரர் தரப்பில் எ.ம.சா.ஆ.1 மற்றும் 2 முன்னிலைப்படுத்தப்பட்டது.

4) பிரச்சினை :-

இம்மனு அனுமதிக்கத்தக்கதா என்பதே ஆகும்.

5) பிரச்சினைக்கான தீர்வு

(i) மனுதாரர்/16 ம்பிரதிவாதி தரப்பில் 17.07.2019 ம் தேதி நீதிமன்றத்தில் ஆஜராக வாய்தா போடப்பட்டிருந்தது எனவும், மனுதாரர் ஊரிலிருந்து பேருந்தில் வரும்போது பேருந்தில் பழுது ஏற்பட்டு நீதிமன்றத்திற்கு வருவதற்கு காலதாமதம் ஆகிவிட்டது எனவும், அன்றையதினம் ஆஜராகததால் மனுதாரர்/16 ம்பிரதிவாதிக்கு எதிராக ஒருதலைப்பட்ச உத்தரவு பிறப்பிக்கப்பட்டுள்ளது எனவும், மேற்படி தவறு வேண்டுமென்றே ஏற்பட்டதல்ல எனவும், எனவே 17.07.2019 ம் தேதியில் மனுதாரர்/16 ம்பிரதிவாதிக்கு எதிராக பிறப்பிக்கப்பட்ட ஒருதலைப்பட்ச உத்தரவினை ரத்து செய்யக் கோரி மனுதாரர்/16 ம்பிரதிவாதி இம்மனுவினை தாக்கல் செய்துள்ளார்.

(ii) எதிர்மனுதாரர்/வாதி தரப்பில் மனுதாரர்/16ம்பிரதிவாதிக்கு நீதிமன்றத்தின் உத்தரவின் பேரில் எதிர்மனுதாரரால் Private Notice அனுப்பப்பட்டு கடந்த 02.07.2019ம் தேதியில் மனுதாரர் பெற்றுக் கொண்டுள்ளார் எனவும், அதன் அறிவிப்பு எ.ம.சா.ஆ.1 எனவும், அஞ்சலக ஒப்புதல் அட்டை எ.ம.சா.ஆ.2 எனவும், மேலும் 2வது முறையாக மனுதாரருக்கு Private Notice அனுப்பக் கோரி எதிர்மனுதாரருக்கு உத்தரவு பிறப்பித்ததின் பேரில் அறிவிப்பு அனுப்பப்பட்டு அதனையும் மனுதாரர் 17.07.2019ம் தேதிக்கு பல நாட்களுக்கு முன்பே பெற்றுக்கொண்டு விட்டார் எனவும், ஆகவே 17.07.2019ம் தேதிக்கு முன்பே மனுதாரரது வழக்கறிஞரைப் பார்த்து மனுதாரருக்கு ஆதரவாக ஆஜராக கோரிட அவகாசம் இருந்தும் வேண்டுமென்றே பொய்யான சங்கதிகளை முன்னிறுத்தி வழக்கினை காலதாமதப்படுத்த மனுதாரர் மனுதாக்கல் செய்துள்ளார் எனவும், எனவே மனுவினை செலவுத் தொகையுடன் தள்ளுபடி செய்ய வேண்டுமென எதிர்மனுதாரர்/வாதி கூறியுள்ளார்.

(iii) மேற்படி எ.ம.சா.ஆ.1 மற்றும் 2லிருந்து 03.07.2019க்கான வாய்தாவிற்கு அறிவிப்பு அனுப்பப்பட்டு அதனை 02.07.2019ல் மனுதாரர் எ.ம.சா.ஆ.2ன் மூலம் பெற்றுக் கொண்டுள்ளது தெரியவருகிறது. ஆனால் மேற்படி எ.ம.சா.ஆ.1 மற்றும் 2 03.07.2019க்கான வாய்தாவில் முன்னிலைப்படுத்தவில்லை. எனவே மீண்டும் அழைப்பாணை அனுப்ப உத்தரவிடப்பட்டு மனுதாரருக்கு சார்வான நிலையில் கடந்த 17.07.2019ல் நீதிமன்றத்தில் ஆஜராகததால் மனுதாரர் தோன்றா தரப்பினராக்கப்பட்டுள்ளது தெரியவருகிறது. இந்நிலையில் பேருந்து பழுதானதால் மேற்படி தேதியன்று நீதிமன்றத்தில் ஆஜராகவில்லை என மனுதாரர் மனுவில் கூறியுள்ள போதும் 03.07.2019ல் அழைப்பாணை சார்வானபோது ஏன் நீதிமன்றத்தில் ஆஜராகவில்லை என்பதற்கு எவ்வித காரணத்தையும் முன்னிலைப்படுத்தவில்லை. இருந்தபோதும் இவ்வழக்கானது பாகபிரிவினை மற்றும் நிரந்தர உறுத்துக் கட்டளை பரிகாரம் கோரி தாக்கல் செய்துள்ளதால் வழக்கினை தகுதிப்பாட்டின் அடிப்படையில் தீர்மானிப்பது இருதரப்பினருக்கும் உகந்தது என்பதாலும், மனுதாரர் இவ்வழக்கில் எதிர்வாதம் புரிய வாய்ப்பு வழங்கலாம் என்பதாலும் இம்மனு அனுமதிக்கத்தக்கது என இந்நீதிமன்றம் தீர்மானிக்கிறது. ஆனால் ஒருதலைபட்ச உத்தரவு பிறப்பிக்கப்பட்ட நிலையில் மனுதாரர் இம்மனுவினை தாக்கல் செய்துள்ளதால் எதிர்மனுதாரருக்கு ஏற்பட்ட காலவிரயத்தை ஈடுசெய்யும் வகையில் ரூ.750/-செலவுத் தொகையாக அளிக்கும்பட்சத்தில் இம்மனுவினை அனுமதிக்கலாம் என இந்நீதிமன்றம் தீர்மானிக்கிறது.

முடிவாக மனுதாரர் எதிர்மனுதாரருக்கு ரூ.750/-செலவுத்தொகையாக 29.08.2019 க்குள் அளிக்கும் பட்சத்தில் இம்மனு அனுமதிக்கப்படும் என உத்தரவிடப்படுகிறது. அழைக்க 30.08.2019.

இந்த உத்தரவு என்னால் சுருக்கெழுத்தருக்கு சொல்லப்பட்டு அவரால் கணிணியில் தட்டச்சு செய்யப்பட்டு, என்னால் பிழைநீக்கம் செய்யப்பட்டு 2019 ஆம் ஆண்டு ஆகஸ்ட் மாதம் 22 ஆம் நாள் இந்த திறந்த நீதிமன்றத்தில் என்னால் அவையறியப் பகரப்பட்டது.

ஒப்பம்/-**திரு.எஸ்.பிரின்ஸ் சாமுவேல் ராஜ்,**
**மாவட்ட உரிமையியல் நீதிபதி,**
**மேட்டுர்.**

<u>மனுதாரர் தரப்பு சாட்சிகள் மற்றும் சான்றாவணங்கள்:- இல்லை</u>

<u>எதிர்மனுதாரர் தரப்பு சாட்சிகள் :-</u> இல்லை

<u>எதிர்மனுதாரர் தரப்பு சான்றாவணங்கள்:-</u>

| | | | |
|---|---|---|---|
| எ.ம.சா.ஆ.1 | 29.6.2019 | Private Notice மற்றும் அஞ்சலக இரசீது | அசல் |
| எ.ம.சா.ஆ.2 | 02.07.2019 | மனுதாரரின் கையொப்பமிடப்பட்ட அஞ்சலக ஒப்புகை அட்டை | அசல் |

ஒப்பம்/-**திரு.எஸ்.பிரின்ஸ் சாமுவேல் ராஜ்,**
**மாவட்ட உரிமையியல் நீதிபதி,**
**மேட்டுர்.**